காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 27 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 138

நடிகை பாலியல் வன்கொடுமை புகார்: ஜெரார் டெபர்டியூ மீது விசாரணை நடைபெறும் என நீதிமன்றம் தீர்ப்பு



சென்னை – 27 நவம்பர், 2026 2018-ல் நடிகை ஷார்லொட் அர்னோல்டை பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் வழக்கில், பிரெஞ்சு திரைப்பட நடிகர் ஜெரார் டெபர்டியூ மீது விசாரணை நடைபெறும் என பாரிஸ் மேல்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

நாடகத்தின் ஒத்திகைக்காக பாரிஸிலுள்ள டெபர்டியூவின் வீட்டுக்குச் சென்ற சில நாள்களுக்குப் பிறகு, அப்போது 22 வயதாக இருந்த அர்னோல்ட் இந்தப் புகாரை அளித்திருந்தார். அவர் தனது அடையாளத்தை மறைக்கும் உரிமையைத் துறந்துவிட்டார்.

வியாழக்கிழமை வெளியான தீர்ப்பு ஒரு "முதல் நடவடிக்கை" என்றும், வரவிருக்கும் விசாரணை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும் என்றும் அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

இரண்டு பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகளின்கீழ் தன் மீது குற்றம் சாட்டப்பட்டதை டெபர்டியூ (77) எதிர்த்திருந்தார். 2023-ல் 'லு ஃபிகாரோ' நாளிதழில் வெளியான கடிதத்தில், அர்னோல்டின் குற்றச்சாட்டுகளை அவர் கடுமையாக மறுத்ததுடன், "எங்களுக்கிடையே எந்தக் கட்டாயமோ வன்முறையோ ஒருபோதும் இருந்ததில்லை" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

'கிரீன் கார்டு', 'தி மேன் இன் தி அயர்ன் மாஸ்க்', 'ஆஸ்டரிக்ஸ்' திரைப்படங்கள் உள்ளிட்டவற்றில் நடித்ததன் மூலம், பல பத்தாண்டுகளாக பிரெஞ்சு மற்றும் சர்வதேசத் திரையுலகில் டெபர்டியூ முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தார். 1996-ல் பிரான்ஸின் உயரிய 'லேஜியன் தானர்' விருது அவருக்கு வழங்கப்பட்டது.

ஆனால், சமீப ஆண்டுகளில் பிரான்ஸில் எழுந்த 'மீ டூ' இயக்கத்தைத் தொடர்ந்து (பிரெஞ்சில் 'பாலன்ஸ் டோன் போர்' — அதாவது 'உன் பன்றியை அம்பலப்படுத்து' என்பது இதன் பொருள்), படப்பிடிப்புத் தளங்களிலும் பிற இடங்களிலும் அவரது நடத்தை குறித்து பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.